# மரணம் சமீபித்திருக்கும்போது

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #27*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

S. *எருசலேமுக்குக் கடைசிப் பயணம் (லூக். 17:11அ) (தொடர்ச்சி).*

8. *வரவிருந்த அவரது மரணம் பற்றி சீஷர்களுக்கு அவரது முன்னெச்சரிக்கை (மத். 20:17-19; மாற். 10:32-34; லூக். 18:31-34).*
9. *ஊழியத்துவம் பற்றி அவரது சீஷர்களுக்குப் போதித்தல் (மத். 20:20-28; மாற். 10:35-45).*
10. *பர்த்தீமேயுவையும் அவரது கூட்டாளியையும் பார்வையின்மையிலிருந்து குணமாக்குதல் (மத். 20:29-34; மாற். 10:46-52; லூக். 18:35-43).*
11. *சகேயுவை பொருளாசையிலிருந்து இரட்சித்தல் (லூக். 19:1-10).*
12. *தமது சீஷர்களைத் திருத்துதல் - மினாக்கள் (அல்லது "இராத்தல்களின்") உவமை (லூக். 19:11-27).*

### அறிமுகம்

*நீங்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் இறந்துபோவீர்கள் என்று உறுதியாக அறிந்தால், நீங்கள் எவ்வாறு பதில்செயல் செய்வீர்கள்?[1] நீங்கள் ஒன்றும் செய்ய இயலாது என்ற அளவுக்குச் செயலற்றுப்போவீர்களா? நீங்கள் தன்னிரக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டிருப்பீர்களா? நீங்கள் நண்பர்களும் உறவினர்களும் உங்களைச் சுற்றிநின்று ஆறுதல்படுத்த வேண்டும் என்பதில் மாத்திரம் அக்கறைகொள்வீர்களா?*

*பல பாடங்களில் நாம் இயேசுவுடன், எருசலேமுக்கு அவரது கடைசிப் பயணத்தில்கூட இருந்துள்ளோம். இந்தப் பாடத்தில், அந்தப் பயணம் முடிவுபெறும். அந்தக் கடைசி மைல்களை இயேசு நடந்து சென்றபோது, ஒரு சில நாட்களில் தமது மரணம் நிறைவேறவிருந்ததை அவர் வேதனையுடன் அறிந்தார் (மத். 20:17-20). சிலுவையை அவர் நெருங்கி நெருங்கிச் சென்றபோது, அவரது நேரம் மற்றும் சிந்தனைகளில் நிறைந்திருந்தவை*

*எவை? இயேசுவின் வாழ்வில் இடர்ப்பாடு மிகுந்திருந்த இவ்வேளையின் போது, அவரது முதன்மைகள், நமது கண்ணோக்கக் கருத்துக்களின்மீது செயல்விளைவை ஏற்படுத்தக் கூடும். மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறியும்போது, நாம் என்ன செய்ய வேண்டும்?*

## தவிர்க்க முடியாதவற்றை மறுக்காதீர்கள்
## *(மத். 20:17-19; மாற். 10:32-34; லூக். 18:31-34)*

*இந்தப் பாடம் தொடங்குகையில், கிறிஸ்துவும் கூட்டத்தாரும் எரிகோவுக்கு அருகில் இருந்தார்கள் (மாற். 10:46ஐக் காணவும்). அநேகமாக அவர்கள், எரிகோவின் கிழக்குப் பகுதியில், யோர்தான் நதியின் மறுபுறத்தில், திருப்பயணிகள் யூதேயாவுக்குள் வருவதற்கு நதியைக் கடக்கும் இடத்தில் இருந்திருக்கலாம்.*[2]

***தயக்கம் இல்லை (மாற். 10:32அ)***

*மாற்கு, "பின்பு, அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில், இயேசு அவர்களுக்கு முன்னே நடந்துபோனார்: அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே, பயத்தோடே போனார்கள்" (வ. 32அ).*[3] *இயேசுவுக்கு மரணம் காத்திருந்த போதிலும் அவர் தயக்கமின்றி முன்நடந்து சென்றார், ஆனால் அவரது சீஷர்கள் பின்வாங்கியவர்களாகக் காணப்பட்டனர். ஒருவேளை அவர்கள், எருசலேமில் இருந்த அதிகாரிகள் அவரைக் கொலை செய்வதற்கு உறுதிப்பாட்டுடன் இருந்ததை அவர் அறிந்திருந்தும், அவர் எருசலேமுக்குச் செல்லுவதைக் குறித்துத் திகைப்படைந்திருக்கலாம் (யோவா. 11:7, 8, 16, 47-54). அவர்கள் அவரது உயிருக்காக மட்டுமின்றித் தங்களது சொந்த உயிர்களுக்காகவும் பயந்தனர் (யோவா. 11:16ஐக் காணவும்).*

***இடறுதல்*[4] *இல்லை (மத். 20:17-19; மாற். 10:32ஆ-34; லூக். 18:31-34)***

*இயேசு பன்னிருவரையும் தனியே அழைத்துச் சென்று, தமக்குக் காத்திருந்தது என்ன என்பதை அவர்களுக்கு மீண்டும் விளக்கப்படுத்தினார். ஒருவேளை, அவர் - தமது தீர்க்கதரிசனத்தின் ஒவ்வொரு விவரமும் நிறைவேற்றம் அடைவதைத் தமது சீஷர்கள் காணத்தொடங்கியவுடன் - தமது மரணத்தை அவர்கள் ஒரு துன்ப நிகழ்ச்சியாகக் கண்ணோக்காமல், தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் வெற்றியாகக் கண்ணோக்குவார்கள் என்று நம்பியிருக்கலாம்.*[5] *அவர்களிடம் அவர் பின்வருமாறு கூறினார்,*

> *இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும்*

*புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே, அவர் உயிரோடே எழுந்திருப்பார் (மத். 20:18, 19).*

கிறிஸ்து தமது மரணத்தைப் பற்றி முன்பே பேசியிருந்தார் (மாற். 8:31-33; 9:30-32[6]ஐக் காணவும்), ஆனால் இவ்வேளையில் அவர் இதற்கு முன் தரப்பட்டிராத விவரங்களைக் கூடுதலாகக் கூறினார்:[7]

- அவர் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் "ஒப்புக் கொடுக்கப்படுவார்" - இது அவர் காட்டிக்கொடுக்கப்படுவார் என்பதற்கான ஒரு குறிப்பாக உள்ளது.
- பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரை மரண ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்த பின்பு, அவரை அவர்கள் புறஜாதியாரிடத்தில் (ரோமரிடத்தில்) ஒப்புக்கொடுப்பார்கள்.
- அவர் பரியாசம் பண்ணப்பட்டு, வாரினால் அடிக்கப்படுவார்.
- அவர் சிலுவையில் அறையப்பட்டு மரணம் அடைவார்.

வழக்கம்போல, அவர் மரணமானது முடிவாயிராது, ஆனால் மூன்றாம் நாளில் "உயிரோடே எழுந்திருப்பார்" என்பதை வலியுறுத்தினார்.[8] மேலும் வழக்கம்போல, அவர் எதைப் பற்றிப் பேசினார் என்பதைக் குறித்து அப்போஸ்தலர்கள் கருத்து எதுவும் கொண்டிருக்கவில்லை: "இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை" (லூக். 18:34; மாற். 9:10, 32ஐக் காணவும்).[9]

## இருப்பிற்கான உங்கள் நோக்கத்தை அறிந்துகொள்ளுங்கள் (மத். 20:20-28; மாற். 10:35-45)

முன்பு, இயேசு தமது மரணத்தைப் பற்றி முன்னுரைத்த பின்பு, அவரது சீஷர்கள், ராஜ்யத்தில் யார் பெரியவராயிருப்பார் என்பது பற்றி வாக்கு வாதம் செய்ததன் மூலம் புரிந்துகொள்ளுதலில் தங்களுக்கிருந்த முழுமை யான குறைபாட்டை செயல்விளக்கப்படுத்தியிருந்தார்கள் (மாற். 9:31-34). இதே போன்றதொரு சூழ்நிலையானது, இந்த வேளையில் அறிவித்தலுக்குப் பின்பும் எழுந்தது.

**நோக்கம்: ஊழியம் கொள்வதற்கா?**

யாக்கோபும் யோவானும் கிறிஸ்துவை அணுகி, தங்களுக்கு ராஜ்யத்தில் - அவரது வலது புறத்தில் மற்றும் அவரது இடது புறத்தில் - மிக முக்கியமான அரியணைகள் தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர் (மத். 19:28).[10] கர்த்தர் ஒரு மென்மையான கடிந்துகொள்ளுதலைச் செயல்படுத்தி, அப்படிப்பட்ட கனத்துக்குரியவற்றைத் தமது பிதா அருளுவார் என்று அவர்களுக்கு அறிவித்தார்.

யாக்கோபும் யோவானும் என்ன செய்திருந்தார்கள் என்பதை மற்ற அப்போஸ்தலர்கள் அறிந்தபோது, அவர்கள் "அந்த இரண்டு சகோதரர்

*பேரிலும் எரிச்சலானார்கள்" (மத். 20:24). இதைப் பற்றி அவர்கள் முதலில் நினைக்காதபடியினால் அவர்கள் இவ்வாறு எரிச்சலடைந்திருக்கலாம். முதற் சிறப்பைப் பெறுவதற்கான அவர்களின் தொடர்ந்த போராட்டமானது, மேசியாத்துவ ராஜ்யத்தின் இயல்பை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறியதைச் செயல்விளக்கப்படுத்திற்று.[11]*

**நோக்கம்: ஊழியம் செய்வதற்கே!**

*ஊழியம் கொள்வதினால் அல்ல ஆனால் பிறருக்கு ஊழியம் செய்வதின் அடிப்படையிலேயே ராஜ்யத்தில் உண்மையான மாபெருந்தன்மை தீர்மானிக்கப்படுகிறது என்ற தமது போதனையை மீண்டும் கூறவும் விரிவாக்கவும் இயேசு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார். அவர் தம்மையே ஒரு உதாரணமாகச் சுட்டிக்காண்பித்தார்: "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத்[12] தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற். 10:45).*

*கிறிஸ்து தாம் யார் என்பதையும் தாம் என்ன செய்ய வந்திருந்தார் என்பதையும் புரிந்துகொண்டிருந்தபடியால், அவரால் தமது மரணத்தை நோக்கித் தீர்மானமாக நடையிட்டுச் செல்ல முடிந்திருந்தது.[13] நோக்கம் மற்றும் ஊழியம் ஆகியவற்றில் இதே விதமான பலத்த கருத்துணர்வைத் தமது சீஷர்களும் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

## தேவன் மகிமைப்படும்படியாக நடந்துகொள்ளுங்கள் (மத். 20:29-34; மாற். 10:46-52; லூக். 18:35-43)

*இயேசுவும் கூட்டத்தாரும் யோர்தான் பள்ளத்தாக்கில் சென்று நதியைக் கடந்து யூதேயாவுக்குள் வந்து சேர்ந்தனர். பின்பு அவர்கள் எரிகோ என்னும் பழமையான நகருக்குள் செல்ல ஏழு அல்லது அதற்குச் சமமான மைல்கள் மேல் ஏறிச் சென்றார்கள்.[14] அங்கு கர்த்தர், பார்வையற்ற இரு மனிதர்களை குணமாக்கவும், கெடுபெயர் கொண்ட ஒரு பாவியை இரட்சிப்புக்குள் கொண்டு வருவதற்கும் நேரம் எடுத்துக் கொண்டதில், ஊழியராயிருப்பதின் அர்த்தம் என்ன என்று செயல்விளக்கப்படுத்தினார். இவற்றில் பார்வையற்ற மனிதர்களைப் பற்றிய வரலாறு முதலில் பதிவு செய்யப்பட்டதாக உள்ளது.[15]*

**உண்மைகளைப் பரிசோதித்தல்**

*ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் மூன்றும், இந்தக் குணமாக்குதல்களின் விவரங்களைக் கொண்டுள்ளன, ஆனால் இவைகள் விவரங்களில் மாறுபடு கின்றன. எடுத்துக்காட்டாக மத்தேயு, பார்வையற்ற இரு மனிதர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் (மத். 20:30), மாற்குவும் லூக்காவும் ஒரே ஒருவரை மட்டுமே குறிப்பிடுகின்றனர் (மாற். 10:46; லூக். 18:35). இதே போன்ற ஒரு சூழ்நிலையை நாம், கதரேன் நாட்டில் அசுத்த ஆவிபிடித்திருந்த இருவரைக்*

குணமாக்கிய நிகழ்ச்சியிலும் கொண்டுள்ளோம்.[16] சுவிசேஷ விவரங்கள் எழுதப்பட்ட வேளையில் இவ்விருவரில் ஒருவர் நன்கு அறியப்பட்டிருக்கலாம். பார்வையற்ற இரு மனிதர்களில் ஒருவரின் பெயரை மாற்கு நமக்கு அறிவிக்கின்றார். இது (அநேகமாக, நன்கு அறியப்பட்டிருந்தவரான) "பர்திமேயு" ("Bartimaeus") என்றுள்ளது, "திமேயுவின் மகன்" என்று இது அர்த்தப்படுகிறது (மாற். 10:46).[17]

மேலும், இந்த மனிதர்கள் மிகச் சரியாக எந்த இடத்தில் குணமாக்கப்பட்டனர் என்பது பற்றி சுவிசேஷ விவரங்களில் மாறுபாடுகள் உள்ளன. லூக்கா, "பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது" என்று கூறினார் (லூக். 18:35), அதே வேளையில், மத்தேயுவும் மாற்குவும், அவர் "எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில்" என்று எழுதினார் (மத். 20:29; மாற். 10:46). எரிகோவின் நுழைவாயிலை இயேசு கடந்து செல்லுகையில், பார்வையற்ற இம்மனிதர்கள், அவ்விடத்தில் அமர்ந்திருந்து இருக்கலாம், ஆனால் அவர் யார் என்று அவர்கள் அறிந்த வேளையில், அவர் நகருக்குள் நுழைந்திருந்தார் என்று கருத்துத் தெரிவிப்பதன்மூலம், காணக்கூடிய இந்த வேறுபாட்டைப் பழைய விளக்கவுரைகள் பல தீர்த்து வைக்கின்றன, இந்த விளக்கத்தின்படி, பின்பு அவர்கள் நகரின் மறுபகுதிக்குச் சென்றார்கள், மற்றும் கிறிஸ்து நகரத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லுகையில் அவரால் குணமாக்கப்பட்டார்கள்.[18] மிகச் சமீபத்திய விளக்கவுரைகள் இரண்டு "எரிகோக்கள்" இருந்தன என்று பொதுவாகச் சுட்டிக்காண்பிக்கின்றன: வரலாற்றுப்பூர்வமான "பழைய" எரிகோ மற்றும் ஏரோதினால் கட்டப்பட்ட "புதிய" எரிகோ. இவ்விதமாக இவைகள், இயேசு *பழைய* எரிகோவை விட்டுப் புறப்பட்டு, *புதிய* எரிகோவை நெருங்குகையில் பார்வையற்ற இவ்விரு மனிதர்களைச் சந்தித்திருக்கலாம் என்று வலியுறுத்துகின்றன. எவ்வகையிலும், இம்மூன்று சுவிசேஷ விவரங்களிலும் தீர்க்கப்பட இயலாத முரண்கருத்து எதுவும் இருப்பதில்லை.[19]

**விசுவாசத்தை வலியுறுத்துதல்**

பார்வையற்ற இரு மனிதர்களும் தாங்கள் பிச்சையெடுக்கும் இடமான சாலையோரத்தில் அமர்ந்திருந்தனர் (லூக். 18:35ஐக் காணவும்). கடந்து செல்வது யார் என்பதை அவர்கள் கேள்விப்பட்டபோது, "ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்"[20] என்று கூப்பிட்டார்கள் (மத். 20:30). அவர்களை அமைதிப்படுத்துவதற்குக் கூட்டத்தார் முயற்சி செய்தார்கள், "அவர்களோ: 'ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்' என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்" (மத். 20:31). இயேசு அவர்களை தம்மிடத்திற்கு அழைத்து (மாற். 10:49)[21] "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் (மத். 20:32). அவர்கள், "ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும்" என்றார்கள் (மத். 20:33). பர்திமேயுவிடம் கிறிஸ்து, "நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார் (மாற். 10:52; லூக். 18:42). குணமாக்கப்படுபவரிடத்தில் விசுவாசம் என்பது எப்போதுமே ஒரு முன்வரையறையாக இருந்ததில்லை,[22] ஆனால் இவ்வேளையில் இது குறிப்பிடப்பட்டிருந்தது.

*இந்த நிகழ்ச்சி உண்மையான விசுவாசத்தின் செயல்துடிப்பான இயல்பை விவரிக்கிறது:*

- *விசுவாசம் அறிக்கையிடப்பட்டது ("தாவீதின் குமாரனே").*
- *விசுவாசம் தொடர்ந்து உறுதியாக இருந்தது (இது கூட்டத்தாரால் ஊக்கம் குன்றவைக்கப்பட மறுத்திருந்தது).*
- *விசுவாசம் பதில் அளித்தது (இயேசுவிடமிருந்து அழைப்புக்கு).*
- *விசுவாசம் வேண்டுகோள் விடுத்தது.*

*குணமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, விசுவாசம் பாராட்டுதலை வெளிப்படுத்தியது மற்றும் விசுவாசம் இயேசுவைப் பின்பற்றச் செய்தது என்பவற்றை நாம் இந்தப் பட்டியலுடன் கூடுதலாகக் கூற இயலும்.*

*"இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்" (மத். 20:34). அவர்கள் கூட்டத்தாருடன் சேர்ந்து அவரைப் பின்பற்றி, "தேவனை மகிமைப்படுத்தி[னார்கள்]. ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்" (லூக். 18:43). கிறிஸ்து எப்போதுமே தமது பிதா மகிமைப் படுத்தப்படும்படியாகவே செயல்பட்டார் (யோவா. 17:4ஐக் காணவும்).*

## *மற்றவர்களையும் நினைத்துப் பாருங்கள் (லூக். 19:1-10)[23]*

*தொடுவானத்தில் துன்பம் அச்சுறுத்தும்போது, நமது சிந்தனைகள் சுயமையங் கொண்டிருக்கச் சாய்கின்றன, ஆனால் இயேசுவின் விஷயத்தில் அப்படியிருந்ததில்லை. அவர் தமது மனதில் அதிகமான [கவலைக் குரிய]வற்றைக் கொண்டிருந்தபோதிலும், பிறரைப் பற்றிச் சிந்திப்ப திலிருந்து அவர் விலகிச் செல்லாதிருந்தார். இது, பார்வையற்ற மனிதர் களைக் குணமாக்கியதில் செயல்விளக்கப் படுத்தப்பட்டது. இதை எரிகோவில் நடந்த இன்னொரு நிகழ்ச்சியிலும் காணமுடியும்: சகேயு என்ற பெயர் கொண்ட ஒரு வரிவசூலிக்கும் மனிதரை இரட்சித்தல்.*

*கர்த்தரைக் காண்பதற்காக ஒரு மரத்தின்மீது ஏறிய "சின்னஞ் சிறு மனிதனை"ப் பற்றிய வரலாற்றைச் சிறுபிள்ளைகள் கூட அறிவார்கள்.[24] இவரது இல்லத்திற்குச் செல்வதற்குக் கிறிஸ்து நேரம் எடுத்துக் கொண்டார், மற்றும் இவ்விதமாக இம்மனிதரின் வாழ்வு மாற்றப்பட்டது.[25] சகேயுவிடம் இயேசு, "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது, ... இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்"[26] என்று கூறினார் (வ. 9, 10).*

## *போதியுங்கள், போதியுங்கள், போதியுங்கள் (லூக். 19:11-27)*

*முடிவு வரையிலும் இயேசு போதித்ததை - சத்தியத்தை மனதில்*

ஆழப்பதியச் செய்து தவறான கருத்துக்களைத் திருத்த முயற்சித்ததை - நாம் காண்போம். கிறிஸ்து தமது சீஷர்களுடன் சகேயுவின் வீட்டில் இருப்பதற்கு ஒரு கணப்பொழுதைக் கொண்டிருக்கையில் அவர், ராஜ்யம் பற்றிய தவறான கருத்துக்களைத் திருத்த முயற்சி செய்வதற்கு பவுண்டுகளின் (மினாக்களின்)[27] உவமையைக் கூறினார்.

**உவமை**

இந்த உவமையில், பிரபுவாகிய ஒரு மனிதர் தமது ஊழியக்காரர்களில் பத்துப்பேரை அழைத்து, அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு இராத்தல் திரவியத்தைக் கொடுத்து (வ. 13, 16, 18, 20), தாம் வெளியூர் சென்றிருக்கையில் அதை வைத்து "வியாபாரம் செய்யும்படி" கூறினார். ஒரு மினா (ராத்தல்) என்பது நூறு தினேரியும் மதிப்புடையதும், வெள்ளியினால் செய்யப்பட்டதுமாகிய கிரேக்க நாணயம் ஆகும்.[28] ஒரு மினா என்பது சராசரியாக வேலை செய்யும் மனிதர் ஒருவர் நான்கு மாதங்களில் ஈட்டக் கூடிய ஊதியத்தொகையைக் குறிப்பிட்டது.[29] பின்பு இந்தப் பிரபு, "ஒரு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான்" (வ. 12). பிற்பாடு இவர், உண்மையுள்ளவர்களுக்குப் பலன் அளிக்கவும் கீழ்ப்படியாமையும் கலககுணமும் கொண்டவர்களுக்குத் தண்டனை அளிக்கவும் திரும்பி வந்தார். இந்த உவமையானது மாறுபட்ட ஒரு வலியுறுத்தம் கொண்டுள்ளது என்பதைத் தவிர, ஒரு சில நாட்களுக்குப் பின்பு கர்த்தரால் கூறப்பட்ட தாலந்துகளின் உவமையைப் போன்றதாகவே உள்ளது (மத். 25:14-30).[30]

**நோக்கம்**

இந்த உவமைக்கான தொடக்க நோக்கம் வசனம் 11ல் கொடுக்கப்பட்டுள்ளது: "அவர் எருசலேமுக்குச் சமீபித்திருந்தபடியினாலும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள் நினைத்தபடியினாலும் அவர் ஒரு உவமையைச் சொன்னார்." கிறிஸ்து, தாம் மரிப்பதற்காக எருசலேமுக்குச் சென்று கொண்டிருப்பதை விளக்கப்படுத்தியிருந்தார், ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். கூட்டத்தினரின் உணர்வெழுச்சியில் பிடிக்கப்பட்டிருந்த அவர்கள்,[31] இயேசு தமது ராஜ்யத்தை நிலைநாட்டுவதென்பதே அவர் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்ததற்கான நோக்கம் என்று நம்பினார்கள். இந்த உவமையில் வரும் பிரபு "தமது ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ள தூரதேசத்துக்குப் புறப்பட்டுச் செல்ல" வேண்டியிருந்தது. இயேசுவே இந்தப் பிரபுவாக இருந்தார், பரலோகம் என்பதே அந்தத் "தூரதேசமாக" இருந்தது. இயேசு ஒரு ராஜாவாக முடிசூட்டப்படுவதற்கு முன்பு, அவர் மரித்து, உயிர்ப்பிக்கப்பட்டு, தமது பிதாவினிடத்திற்கு எழுந்தருளிச் செல்ல வேண்டியிருந்தது (அப். 2:32, 33; வெளி. 3:21ஐயும் காணவும்).[32]

சட்டப்படியாக, ஒரு உவமையானது ஒரு சத்தியத்தைப் போதிப்பதற்கென்றே வடிவமைக்கப்பட்டது. ஆயினும், இந்த விஷயத்தில், உவமையானது கூடுதலான பாடங்களை உள்ளடக்கியிருந்தது.[33]

- இது கிறிஸ்துவின் சீஷர்களுக்கு ஒரு விசேஷித்த அறைகூவலை உள்ளடக்கியிருந்தது. அவர் புறப்பட்டுச் சென்ற பின்பு, அவர்கள் வேலை மும்முரமாக இருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. அவர் மாபெரும் பொறுப்பை அவர்களிடத்தில் கொடுப்பார், மற்றும் ஒரு நாளிலே அவர்களைக் கணக்கு ஒப்புவிக்கும்படி அழைப்பார் (2 கொரி. 4:17ஐக் காணவும்).
- இது இயேசுவின் விரோதிகளுக்கு ஒரு விசேஷித்த எச்சரிக்கையை உள்ளடக்கியிருந்தது: அவரைப் புறக்கணிப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

## முடிவுரை

இயேசு எரிகோவை விட்டுப் புறப்பட்டு, பயணத்தின் கடைசிப் பகுதியைத் தொடங்கினார்: எரிகோவிலிருந்து (கடல் மட்டத்திலிருந்து 1,200 அடிகள் கீழாக இருந்து) எருசலேமுக்கு (கடல் மட்டத்தில் இருந்து 2,500 அடிகள் மேலாக நோக்கி) பதினேழு மைல்கள் ஏறிச் செல்ல வேண்டியிருந்த பயணமாக இது இருந்தது. நமது அடுத்த பாடமானது, அவர் பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்ததில் தொடங்கும்.

இந்தப் பாடமானது, சிலுவைக்கு ஒரு சில தினங்கள் முந்திய காலத்தின் போது இயேசுவின் சிந்தனைகளிலும் வாழ்விலும் நிறைந்திருந்தவை யாவை என்பது பற்றி கவனம் செலுத்திற்று. நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வதற்குத் திட்டமிட்டுள்ளபடியால், இந்தப் பாடம் உங்களுக்குச் சிறிதளவே நடைமுறைப்படுவதாக நீங்கள் நினைக்கலாம், ஆனால் மரணம் எப்போதுமே "சமீபத்தில்" உள்ளது என்பது சிந்தனைமிக்க உணர்ந்தறிதலாக உள்ளது (எபி. 9:27ஐக் காணவும்). கிறிஸ்துவின் உதாரணம் நாம் எல்லாக் காலத்திலும் எவ்வாறு வாழவேண்டும் என்பதைச் செயல்விளக்கப் படுத்துகிறது:

- தவிர்க்க முடியாதவற்றை மறுக்காதீர்கள். மரணம் எந்த வேளையிலும் வரக்கூடும் என்பதை ஒப்புக்கொள்ளுதல், வாழ்வில் ஒரு மாறுபட்ட கண்ணோக்கை இடுகிறது.
- இருப்பிற்கான உங்கள் நோக்கத்தை அறிந்துகொள்ளுங்கள். நாம் ஒவ்வொருவருமே இங்கு ஒரு நோக்கத்திற்காகவே வைக்கப்பட்டு இருக்கின்றோம். அந்த நோக்கத்தைப் புரிந்துகொள்ளுதல், வாழ்விற்கு அர்த்தம் தருகிறது.
- எப்போதுமே தேவன் மகிமைப்படும்படியாக நடந்துகொள்ளுங்கள். "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" (மத். 5:16).
- மற்றவர்களை நினைத்துப் பாருங்கள். தங்கள் சிந்தனைகளைத் தங்கள்மீதே மையங்கொண்டவைகளாக உள்ள மக்களே இந்தப் பூமியில் மிகவும் பரிதாபத்திற்குரிய மக்களாக உள்ளனர்.
- போதியுங்கள், போதியுங்கள், போதியுங்கள். தேவனுடைய

*வசனத்தின் சத்தியங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.*

*நீங்கள் இன்னும் ஒரு வாரம் வாழ்ந்தாலும் அல்லது இன்னும் ஒரு நூறாண்டுகள் வாழ்ந்தாலும், "பூமியில் உங்கள் கடைசி நாட்களை" வாழ்வதற்கு இதைவிடச் சிறப்பான வழி வேறெதுவும் இல்லை.*

---

*குறிப்புகள்*

*[1]இந்தக் கருத்தின்மீது நீங்கள் வகுப்பில் ஒரு கலந்துரையாடலை நிகழ்த்த விரும்பலாம். ஒரு சூழ்நிலை நேருமுன்பு நாம் எவ்வாறு பதில்செயல் செய்வோம் என்பதை நாம் உண்மையில் அறிவதில்லை, ஆனால் கேள்வியைக் கேட்பதென்பது பூமியில் இயேசு தமது கடைசி ஒரு சில நாட்களின்போது கொண்டிருந்த முன்னுரிமைகளுக்கு ஒரு பின்னணியை அமைக்கக்கூடும். ஒருவேளை நீங்களோ அல்லது வகுப்பில் உள்ள மற்றவர்களோ, எவ்வளவு நாட்களுக்கு இன்னும் வாழ முடியும் என்று மருத்துவர்களால் கூறப்பட்ட மக்களை அறிந்திருக்கலாம். அந்தச் செய்திக்கு அவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்தார்கள்? [2]"இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தைக் காணவும். [3]மாற்கு 10:32ல் உள்ள "அவர்கள்" என்பதும், "அவருக்குப் பின்னே போனார்கள்" என்பதும் மாறுபட்ட குழுக்களாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். இவ்விரண்டும் மாறுபட்ட குழுக்களைக் குறித்தது என்றால், "அவர்கள்" என்பது அநேகமாகப் பன்னிருவரைக் குறிக்கிற வேளையில், "அவருக்குப் பின்னே போனார்கள்" என்பது அவருடன் பயணம் செய்து கொண்டிருந்த மற்ற சீஷர்களைக் குறிக்கலாம். [4]"*Hedge*" என்ற வார்த்தை, ''தெளிவான கூற்றை ஏற்படுத்துதலைத் தவிர்த்தல்'' என்ற ஒரு அர்த்தம் கொண்டுள்ளது. இயேசு அதைச் செய்யவில்லை. அவர், வரவிருந்த தமது மரணத்தைப் பற்றித் தெளிவாகப் பேசினார். [5]பிற்பாடு அவர்கள் சிலுவையை இந்த[க் கருத்தின்] வெளிச்சத்தில் கண்ணோக்க வந்தனர் (யோவா. 12:16ஐக் காணவும்). [6]பெரும்பாலான எழுத்தாளர்கள், மத்தேயு 20:18ஐ (மற்றும் சிலுவை பற்றிய குறிப்பை), இயேசு தமக்கு வரவிருந்த பாடுகளைப் பற்றிப் பேசிய ''மூன்றாவது வேளை'' என்று குறிப்பிடுகின்றனர், ஆனால் ஒரு சிலர் கருத்து வேறுபடுகின்றனர். மிகச் சரியான எண்ணிக்கை முக்கியத்துவமற்றதாக உள்ளது; கிறிஸ்து தாம் பாடுபடப் போவதாகப் பிற வேளைகளில் சுட்டிக்காண்பித்தார் (எடுத்துக்காட்டாக, மத். 17:12; லூக். 5:35; 9:22, 43-45; 12:50; 13:32, 33; 17:25 ஆகியவற்றைக் காணவும்). [7]காஃப்மென் என்பவர், "நெருங்கிக் கொண்டிருந்த பாடுகளைப் பற்றி கிறிஸ்துவால் சுட்டிக்காட்டப்பட்ட தகுதி வாய்ந்த மற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த பதினான்கிற்கும் குறையாத விவரங்களை" பட்டியலிட்டார்* (James Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968], 310-11). *[8]மத்தேயு சுவிசேஷத்தில், "மூன்றாம் நாளிலே" என்றுள்ளது (மத். 20:19) மற்றும் மாற்கு சுவிசேஷத்தில் "மூன்று நாளைக்குப் பின்பு" என்றுள்ளது (மாற். 8:31), அதே வேளையில் லூக்கா சுவிசேஷத்தில், "மூன்றாம் நாளிலே" என்று மட்டும் உள்ளது (லூக். 18:33). "... இந்த வார்த்தைகள் கண்டிப்பான நேரடிப் பொருளில் விளக்கப் படக் கூடாது என்பது தெளிவாக உள்ளது"* (Orville E. Daniel, *A Harmony of the Four Gospels,* 2d ed. [Grand Rapids, Mich.: Baker Books, 1996], 143). *[9]"அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது" என்று லூக்கா 18:34 கூறுகிறது. இது புரிந்துகொள்ளுதலில் இருந்து அவர்களைத் தடை செய்திருந்த*

முன் சிந்தனைகள் அவர்கள் மனதில் நிறைந்திருந்ததை மாத்திரம் குறிப்பிடுவதாக இருக்கலாம், ஆனால் இது அவர்களை துயரத்தினால் மூழ்கடிக்கப்படுவதைத் தடை செய்வதற்கான ஒரு தெய்வீக இடையிடுதலைக் குறிப்பதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. லூக்கா இதே போன்ற மொழிநடையை லூக்கா 9:45ல் பயன்படுத்தி யுள்ளார். [10]யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாயாரும் கூட இந்த வேண்டுகோளை விடுத்தார். இந்த நிகழ்ச்சி பற்றிய ஒரு விவரமான படிப்பிற்கு “நீங்கள் வளரும்போது என்னவாகப் போகின்றீர்கள்?” என்ற அடுத்து வரும் பிரசங்கத்தைக் காணவும்.

[11]இந்தப் போராட்டமானது எருசலேமில் மேல்வீட்டில் மீண்டும் எழுந்தது (லூக். 22:24). [12]“மீட்கும் பொருள்” என்ற வார்த்தை அடுத்த வரும் பிரசங்கத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. [13]இன்னொரு நோக்கக் கூற்று மத்தேயு 9:13ல் தரப்பட்டுள்ளது. மத்தேயு 1:21; 1 தீமோ. 1:15 ஆகியவற்றைக் காணவும். [14]“இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்” என்ற வரைபடத்தைக் காணவும். எரிகோ பற்றிய ஒரு விவரிப்பிற்கு “எஜமானை சந்தியுங்கள்” என்ற புத்தகத்தில் பக்கங்கள் 164-65ல் காணவும். [15]குணமாக்கிய விவரத்தையும் சகேயுவின் வரலாற்றையும் கூறிய ஒரே எழுத்தாளர், லூக்கா மட்டுமேயாவார், இவர் குணமாக்கிய விவரத்தை முதலில் வைத்தார் (லூக். 18:35; 19:1, 2). [16]இந்த வரலாற்றை நான் மீண்டுமாக நினைத்துப் பார்க்கையில், நான் பயன்படுத்தும் சுவிசேஷ விவரம் எதுவாக இருப்பினும், நான் வழக்கமாக, பார்வையற்ற இரு மனிதர்கள் என்றே குறிப்பிடுகின்றேன். [17]“Bar” என்பது “இன்னாரின் மகன்” என்பதற்கு அரமாயிக் வார்த்தையாகும். அநேகமாக, ரோம மக்களுக்கு எழுதிய மாற்கு (“கிறிஸ்துவின் வாழ்வு, 1” என்ற புத்தகத்தில் காணவும்), யூதரல்லாத மக்கள் கூட்டத்திற்கு பழக்கமற்ற சொற்றொடர்களை விளக்கப்படுத்தியிருந்தார். [18]அவர்கள் கிறிஸ்துவுக்கு முன்னால், நகரத்தின் மறுபுறத்தில் சென்று சேர்ந்திருக்கக்கூடும், ஏனென்றால் இயேசு நகரத்திற்குள் சற்று நேரம் தாமதித்திருந்தார் (அவர் சகேயுவின் இல்லத்தில் சற்று நேரம் செலவிட்டார்). [19]கல்வெர் அவர்கள், மாறுபாடுகளாகத் தோன்றுபவைகள் பற்றிச் சாத்தியமான ஏழு விளக்கங்களைக் கொடுத்தார் (Robert Duncan Culver, *The Life of Christ* [Grand Rapids, Mich.: Baker Book House, 1976], 212-13). [20]“தாவிதின் குமாரன்” என்பது மக்கள் மேசியாவைக் குறிப்பிட்ட வழிமுறை யாக இருந்தது. பார்வையற்ற மனிதர்கள் இவ்விதமாக தாங்கள் இயேசுவின்மீது கொண்டிருந்த விசுவாசத்தை துவக்கத்தில் இருந்து வெளிப்படுத்தினார்கள்.

[21]இவ்விடத்தில் மாற்கு, ஆர்வத்திற்குரிய விவரம் ஒன்றைக் கூடுதலாகக் கூறினார்: பர்திமேயு தன் மேல்வஸ்திரத்தை அதாவது தான் மேலே அணிந்திருந்த உடையை எறிந்துவிட்டார் (மாற். 10:50). இந்த வஸ்திரம் என்பது “அநேகமாக, பிச்சைக்காரரின் உடைமையில் பாதிக்கு மேற்பட்டதைக் குறிப்பிட்டு இருக்க வேண்டும், ஆனால் இவர் இதைக் காட்டிலும் தமது கண்பார்வையை அதிகமாய் மதித்தார், மற்றும் இது கூட்டத்தினூடே கடந்து இயேசுவைச் சென்று சேரத் தடையாக இருந்ததால், இவர் இதைத் தூக்கியெறிந்து விட்டார்” (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 560-61). பிரசங்கியார்களும் போதகர்களும், நாம் இயேசுவைச் சென்று சேர விருப்பம் கொண்டிருந்தால், நாமும்கூடத் தூக்கியெறிய வேண்டிய விஷயங்கள் உள்ளன என்று சுட்டிக்காண்பிக்கின்றனர் (எபி. 12:1ஐக் காணவும்). [22]மாற்கு 2ல் வரும் திமிர்வாதம் கொண்ட மனிதர் குணமாக்கப்படுவதற்கான விசுவாசம் கொண்டிருந்தார் என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை. மரித்தோரிலிருந்து இயேசுவால் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் “குணமாக்கப்” படுவதற்கு முன்பு விசுவாசம் கொண்டிருந்ததில்லை என்பது உறுதி.

*[23]பலவீனர், தேவையில் இருந்தவர்கள் மற்றும் புறம்பாக்கப்பட்டவர்களுக்காகப் போராடுபவராய் இருந்த லூக்கா மாத்திரமே - சகேயுவின் கதையைக் கூறினார். [24]அமெரிக்காவில்* "A Wee Little Man" *என்ற ஒரு பாடலானது குழந்தைகளுக்கான புகழ்பெற்ற பாடல்களில் ஒன்றாக உள்ளது.* "Wee" *என்பது "மிகச் சிறிய" என்று அர்த்தம் தருகிற ஒரு பழைய ஆங்கில/ஸ்காட்டிஷ் வார்த்தையாக உள்ளது. [25]லூக்காவின் சுவிசேஷ விவரத்தில், சகேயுவின் வரலாறு (லூக். 19:1-10), செல்வந்தனும் இளைஞனுமான அதிகாரியின் வரலாற்றிற்குச் சற்றுப் பின்பே வருகிறது (லூக். 18:18-27). ஏவுதலினால் லூக்கா, "ஒரு ஒட்டகமானது" எவ்வாறு "ஒரு ஊசியின் காதில் நுழைந்தது" என்று விவரித்தார் (லூக். 18:25). [26]லூக்கா 19:10 இன்னொரு மாபெரும் நோக்கக் கூற்றாக உள்ளது: இதை இந்தப் பாடத்தில் முன்பு படித்த மாற்கு 10:45உடன் ஒன்றாக வைத்துப் பாருங்கள். [27]*KJV*யில்* "pounds" *("ராத்தல்") என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதால் இது வழக்கமாக "ராத்தல்களின் உவமை" என்று அறியப்படுகிறது.* NASB*யானது,* "minas" *என்ற வார்த்தையைக் கொண்டு கிரேக்க மொழி வேத வசனத்தை மிகச் சரியாகக் குறிப்பிடுகிறது. [28]முன்பே குறிப்பிட்டபடி, ஒரு தினேரியம் என்பது ஒரு உழைப்பாளிக்கு ஒரு நாள் கூலியாக இருந்தது (மத். 20:2ஐக் காணவும்). [29]லூக்கா 19:17ம் வசனமானது மினா என்பதை "மிகச் சிறிய பொருள்" என்று குறிப்பிடுகிறது, ஆனால் இது ஒப்பீட்டு நிலையில்தான் - அந்த ஊழியக்காரர் பெற்றுக்கொண்ட பத்துப் பட்டணங்களின்மீதான அதிகாரத்துடன் ஒப்பிடும்போது - "மிகவும் சிறியதாக" இருந்தது. [30]தாலந்துகளின் உவமை பற்றிய கலந்துரையாடலை அடுத்து வரும் "கிறிஸ்துவின் வாழ்வு," என்ற புத்தகத்தில் காணவும். அந்த வேளையில், நாம் "காசுக்கடை" (லூக். 19:23) என்றால் என்ன மற்றும் லூக்கா 19:26ல் அமைவிக்கப்பட்ட கொள்கை என்ன என்பவை பற்றிக் கலந்துரையாடுவோம்.*

*[31]முன்னெதிர்பார்ப்பும் உணர்வெழுச்சியும், எருசலேமில் வெற்றிப் பிரவேசத்தில் உச்சகட்டத்தை அடைந்தது - இதைப் பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் படிப்போம். இயேசு உடனடியாகத் தமது ராஜ்யத்தை நிலைநாட்டாமல் இருந்தபோது, அவரது பிரபலத் தன்மையானது மட்டுப்படத் தொடங்கியது. ஒரு சில நாட்களுக்குப் பின்பு அந்தக் கூட்டத்தார் "இவனைச் சிலுவையில் அறையும்!" என்று கூக்குரலிட்டார்கள். [32]இயேசு பரத்திற்கேறி, பத்து நாட்கள் சென்ற பின்பு, பெந்தெகொஸ்தே நாளன்று, கிறிஸ்து முடிசூட்டப்பட்டதை அறிவிக்கவும் ராஜ்யத்தை/சபையை நிலைநாட்டவும் பரிசுத்த ஆவியானவர் வந்தார். [33]சுவிசேஷ விவரங்களில் ''உவமை'' என்பது போதனையின் பல்வேறு வகைகளை உள்ளடக்குகிற வகையில் மிகவும் நெகிழ்வாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் பலமுறை கவனித்துள்ளோம்.*